17th July 1957]

Coastal cargo service between Calcutta and Bombay via Madras

* 127 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to introduce the Coastal Cargo Service between Calcutta and Bombay via Madras touching all the intermediate ports on the East and West Coasts?

MR. SPEAKER: இந்தக் கேள்விக்கும் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: There is no such proposal under the consideration of the State Government.

Amendments to the City Municipal Act, 1919

* 128 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to Question No. 2025 on 9th August 1955 whether the amendments proposed by the Madras Corporation to the Madras City Municipal Act, 1919, have since been taken up for consideration and if so, when the amending Bill will be introduced in the Legislature?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Yes, Sir, The amending Bill will be introduced as soon as the amendments to the Madras City Municipal Act are finalised by the Government.

SRI S. PAKKIRISAMY PILLAI: திருத்தங்கள் பற்றிய யோசனைகள் கார்ப்பொரேஷனிலிருந்து **1955**-ம் வருஷத்தில் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டன. இப்போது இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அந்த யோசனைகளைப் பரிசீலனை செய்வதில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற் படுகிறது? காலதாமதத்திற்கு தகுந்த காரணங்களை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: பஞ்சாயத்து போர்டு, ஜில்லா போர்டு முதலிய ஸ்தாபனங்களின் விஷயங்களைப் பற்றி ஆலோசித்த பிறகு கடைசியில் கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆலோசிப் பதாக இருந்த காரணத்தாலும் இப்போதுதான் உபகமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது என்ற காரணத்தாலும் காலதாமதம் ஏற்பட்டது.

SRI M. JAGANNATHAN: May I know, Sir, the probable date by which the amending Bill would be finalised by the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: As soon as the Committee completes its work.

SRI K. VINAYAKAM: Sir, are Government aware of the fact that this kind of request from the Corporation Council came even before the elections to the Corporation Council last time and then the answer given by the Minister in charge of the portfolio was 'let the elections be over; afterwards the amendments could be brought'. Does the Government realise the immediate necessity that the Act should be amended as early as possible, at least before the ensuing elections to the Corporation Council?

[17th July 1957

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government have realised the necessity and that is why they are trying to do that.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கார்ப்பொரேஷன் நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன என்றும், பொதுமக்களுக்குக் குறைகள் மிகுதியாக இருக்கின்றன என்றும் புகார்கள் அதிகமாக இருப்பதால், அந்தக் குறைகளையும் ஊழல்களையும் நிவர்த்திப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆலோசிக்கப்படுமா ?

THE HON. SRIMATHAI LOURDHAMMAL SIMON : குறைகள் இருந்தால் அவைகளை நிவர்த்திப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : May I know the nature of the amendments which the Corporation has requested from the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : They have asked for some 150 amendments. It will be difficult to read them out now.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN : கார்ப்பொரேஷன் பல யோசனைகள் கொடுத்திருக்கின்றன. அதிக லாபம் சம்பாதிக்கும் பெரிய தொழிற்சாலைகளுக்கு கார்ப்பொரேஷன் ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் தொழில் வரியாகவோ மற்றவரிகளாகவோ விதிக்கவேண்டும் என்ற விதியை மாற்றி, கார்ப்பொரேஷன் தன் இஷ்டம்போல் வேண்டிய வரியை விதிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது பற்றியும் ஆலோசிக்கப்படும் என்று நான் தெளிவாகச் சொல்லுகிறேன்.

Import of rice

* 129 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the quantity of rice imported into this State from the adjoining States during the years 1954, 1955, 1956; and

(*b*) the steps taken to make this State self-sufficient?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In paragraph 5, page 3 of the statement, it is stated that the Collectors have been empowered to take steps to sell in auction, the right to cultivate arable lands, etc. I want to know whether the ryots who cultivate the lands have got any occupancy right? If not, if the Collectors bring it in auction every year, will ryots have any incentive for intensive cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

---

[a] Printed as Appendix I on pages 680–683 *infra*.